DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சுப்புலட்சுமி | Father/Husband Name : ஜீவானந்தம் |
| Age : 46 | Village : படந்தால் |
| Taluk : | Calling : தீப்பெட்டி ஆபீஸில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1 Jun 2026 11:50

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் படந்தாலில் குடியிருந்து வருகிறேன். நான் தீப்பெட்டி ஆபீஸில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஜீவானந்தம் எனது கணவர் ஆவார். அவர் தாயில்பட்டியில் டெய்லர் கடை வைத்து நடத்தி வந்தார். எனது கணவர் வழக்கமாக காலை 08.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு வேலைக்கு பேருந்தில் சென்றுவிட்டு இரவு 07.00 மணிக்கு பணி முடித்து பேருந்தில் வருவது வழக்கம்.

2. கடந்த 27.01.2021ம் தேதி எனது கணவர் காலையில் வழக்கம்போல் வேலைக்கு சென்றுவிட்டார். அன்று மாலை சுமார் 07.15 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது முத்துராஜ் என்பவர் போன் செய்து எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு சாத்தூர் ஸ்டார் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக கிடைத்த தகவலின் பேரில் நானும், எனது மகன் பொன்ராஜும் சாத்தூர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு பின்னந்தலையிலும், கைகளிலும் காயம் ஏற்பட்டு பேச்சு மூச்சின்றி சிகிச்சையிலிருந்தார். நாங்கள் சென்றபோது எனது கணவர் எங்களை கண்விழித்து பார்க்கவில்லை.

3. விபத்து பற்றி எனது மகன் முத்துராஜிடம் கேட்டபோது முத்துராஜ் எனது கணவர் குருலிங்காபுரம் பேருந்து நிலையத்தில் வைத்து ஸ்ரீனிவாஸ் தனியார் பேருந்தில் இரவு 07.15 மணியளவில் பேருந்து நிறுத்ததில் எனது கணவர் பேருந்திலிருந்து படியில் இறங்குவதற்குள் பேருந்தின் ஓட்டுனர் பேருந்தை நகர்த்தியதால் எனது கணவர் கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் ஸ்டார் தனியார் மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த புகார் வாக்குமூலத்தில் எனது மகன் பொன்ராஜ் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார்.

4. அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக எனது கணவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கிருந்த எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

1 Jun 2026 12:00

(Sd/-S.Varatharajan)

Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சேகர் | Father/Husband Name : கோபால் |
| Age : 44 | Village : குருலிங்காபுரம், சாத்தூர் |
| Taluk : | Calling : சிக்கன் கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1 Jun 2026 12:03

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் சாத்தூர் குருலிங்காபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தூர் குருலிங்காபுரம் பேருந்து நிறுத்தம் அருகே சிக்கன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஜீவானந்தம் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது, அவரை நான் பார்த்ததில்லை.

2. கடந்த 27.01.2021ம் தேதி இரவு 07.00 – 07.15 மணியளவில் நான் கடையில் வியாபாரம் செய்துகொண்டிருந்தபோது சிவகாசியலிருந்து சாத்தூர் செல்கின்ற ஸ்ரீனிவாசா தனியார் பேருந்து குருலிங்காபுரம் பேருந்து நிறுத்தத்தில் வந்து நின்றது. அப்போது அந்த பேருந்திலிருந்த ஜீவானந்தம் பேருந்தின் பின்புறம் படிக்கட்டிலிருந்து இறங்கியபோது பேருந்தின் ஓட்டுனர் வண்டியை நகர்த்தியதால் படியில் இறங்கிக்கொண்டிருந்த ஜீவானந்தம் நிலை தடுமாறி கீழே விழுந்தார். அந்த பேருந்தின் ஓட்டுனர் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பேருந்திலிருந்து கீழே விழுந்த ஜீவானந்தத்திற்கு தலையின் பின்புறமும், வலது கைமுட்டியிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. ஜீவானந்தம் கீழே விழுந்த சமயத்தில் மேற்படி ஸ்ரீனிவாசா தனியார் பேருந்து நகர்ந்து சென்று விட்டது.

3. காயம்பட்ட ஜீவானந்தத்தை ஒரு ஆட்டோவில் ஏற்றி சாத்தூர் ஸ்டார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக முத்துராஜ் என்பவருடன் அனுப்பி வைத்தேன். நான் மறுநாள் விசாரித்தபோது காயம்பட்ட ஜீவானந்தத்தை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை._

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

1 Jun 2026 12:08

(Sd/-S.Varatharajan)

Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : வேல்முருகன் | Father/Husband Name : துரைராஜ் |
| Age : 47 | Village : படந்தால், சாத்தூர் |
| Taluk : | Calling : டீக்கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1 Jun 2026 12:20
(Accused Present)sw

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் சாத்தூர் படந்தாலில் குடியிருந்து வருகிறேன். நான் குருலிங்காபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ஜீவானந்தத்தை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

2. கடந்த 27.01.2021ம் தேதி இரவு 07.15 மணியளவில் நான் கடையில் வியாபாரம் செய்துகொண்டிருந்தபோது சிவகாசி – சாத்தூர் வழித்தடத்தில் செல்லும் ஸ்ரீனிவாச தனியார் பேருந்து குருலிங்காபுரம் பேருந்து நிறுதத்தில் நின்றது. அந்த சமயத்தில் எனது அருகில் இருந்தவர்களும், டீக்கடையில் இருந்தவர்களும் பேருந்தை நோக்கி ஓடினார்கள். நான் என்னவென்று அவர்களிடம் விசாரித்தபோது ஜீவானந்தம் பேருந்திலிருந்து கீழே விழுந்துவிட்டதாக என்னிடம் தகவல் கூறினார்கள். மேற்படி பேருந்தை ஓட்டிய நபர் பற்றியோ, பேருந்தின் பதிவெண் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. எதனால் விபத்து ஏற்பட்டது என்று நான் கேள்விப்பட்டேனா என்றால் பேருந்தில் ஏறும்போது தடுமாறி கீழே விழுந்துவிட்டதாக கூறினார்கள், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

3. சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் காயம்பட்ட ஜீவானந்தத்தை சாத்தூர் ஸ்டார் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் என்னிடம் தகவல் கூறினார்கள். பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஜீவானந்தம் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(***<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது</u>***)

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u> –

4. குருலிங்காபுரம் பேருந்து நிறுத்தத்திற்கும், நான் நடத்திவரும் டீக்கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். நான் எதனால் சம்பவ இடத்திற்கு சென்று நேரில் பார்க்கவில்லை என்றால் எனது வியாபாரத்தை கவனித்து வந்த காரணத்தினால் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை.

5. கடந்த 27.01.2021ம் தேதி மாலை 07.15 மணியளவில் ஆஜர் எதிரி TN 67 AC 3233 என்ற பதிவெண் கொண்ட ஸ்ரீனிவாசா தனியார் பேருந்தை குருலிங்காபுரம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து பின்புற படிக்கட்டில் ஜீவானந்தம் இறங்கிக்கொண்டிருப்பதை கவனிக்காமல் பேருந்தை நகர்த்தியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்து சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**</u> இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.
1 Jun 2026 12:28

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy //P.P